செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 109 நாள் : 25/2/17

நக.எச்2.13043/2016,

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
வேலூர்-9.

நாள்24.02.2017.

## பத்திரிக்கை செய்தி

2017 ஜனவரி 1-ம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், கடந்த ஆண்டு செப்டம்பர் 1-ம் தேதி வரைவுப்பட்டியல் வெளியீட்டுடன் தொடங்கியது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு, நீக்கம், திருத்தம், இடமாற்றம் செய்ய விண்ணப்பங்கள் கடந்த ஆண்டு செப்டம்பர் 1-ம் தேதி முதல் 30-ம் தேதி வரை பெறப்பட்டன.

வேலூர் மாவட்டத்தில் மொத்தம் 1 லட்சத்து 33 ஆயிரத்து 175 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 1 லட்சத்து 29 ஆயிரத்து 003 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டன. அவர்கள், கடந்த ஜனவரி 5ம் தேதி வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், இடப்பெயர்ச்சி, இறப்பு மற்றும் இரட்டை பதிவு ஆகியவற்றின் காரணமாக 22 ஆயிரத்து 258 பதிவுகள் நீக்கப்பட்டுள்ளன.

மேற்காணும் சிறப்பு சுருக்க திருத்தம் 2017-ன் போது புதியதாக பெயர் சேர்க்க விண்ணப்பத்தவர்களுக்கு தமிழகத்தில் உள்ள இ-சேவை மையங்கள் மூலம் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை அளித்துள்ள புதிய வாக்காளர்களுக்கு ஒரு தனிப்பட்ட அடையாள எண், குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்படும். இந்த அடையாள எண்ணை தங்கள் பகுதிக்கு அருகில் உள்ள இ-சேவை மையத்தில் அந்தந்த வாக்காளரே நேரில் சென்று காண்பித்து வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். மேலும் விண்ணப்பத்தில் கைப்பேசி எண்ணை அளிக்காதவர்கள் அல்லது மேற்காணும் குறுஞ்செய்தி வரப்பெறாதவர்கள் ஏற்கனவே தங்கள் வசமுள்ள வேறு ஏதேனும் புகைப்படத்துடன் கூடிய ஆவணங்களை (ஆதார் அட்டை, குடும்ப அட்டை போன்றவை) தங்கள் பகுதிக்கு அருகில் உள்ள இ-சேவை மையத்தில் காண்பித்து வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே பெயர் இடம் பெற்று வாக்காளர் அடையாள அட்டையை தவறவிட்டவர்கள் தங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள "மக்கள் பொது சேவை மையத்தினை"(இ-சேவை) அணுகி ரூ.25/- செலுத்தி நகல் அட்டை பெற்றுக்கொள்ளவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளது எனவும், இவ்வாய்ப்பினை வாக்காளர் பயன்படுத்திக்கொள்ளுமாறும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி.அ. ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

ச. இளங்கோ
25.2.17

செ.ம.தொ.அ.
வேலூர்-9.